

Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No5 Pages 4 Sunday, 23 March 2008 Free Copy

இடம்பெயர்ந்த மக்களுக்கான சுகாதார மேம்படுத்தல் நடவடிக்கையில் மேர்லின் நிறுவனத்தின் பங்கு

மட்டக்களப்பு நகரிற்கு சுமார் 9 கி.மி. தொலைவில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறியுள்ள நாவற்காடு கிராமம் அமைந்துள்ளது.

எமது குழுவினருடன் அங்கு சென்ற போது அங்குள்ள மருத்துவ மனையின் வெளி நோயாளர் சிகிச்சை பிரிவில் 20 பேரிற்கு மேற்பட்டோர் சிகிச்சைக் காக வரிசையில் காத் திருந்தனர்.

இந்த மருத்துவமனை ஆரம்பத்தில் சகல வசதி களுடன் காணப்பட்ட போதிலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட உள் நாட்டு யுத்தம் காரணமாக பாதிக்கப் பட்டுள்ளது.

இதனை மீள் திருத்து வதற்கான உதவிகளையும் வெளிநோயா ளர் பிரிவிற்கு தேவையான மருந்துப் பொருட்களையும் மேர்லின் எனும் சர்வ தேச அரச சார்பற்ற நிறுவனம் வழங்கி வரு கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப் பளை வவுணதீவு வாகரை ஏறாவூர் செங்க லடி போன்ற 5 பிரதேச செயலாளர் பிரிவுக



நாவற்காடு கிராம வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் குழந்தை

ளில் உள்ள 12 முகாம்களில் இந்த நிறுவ னம் தனது பணிகளை மேற்கொண்டு வரு கின்றது.

இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களிடையே காணப்படும் சுகாதார பிரச் சினைகள் தொடர்பாக இந்த நிறுவனத்தின் சுகாதார நிகழ்ச்சித்திட்ட சிரேஷ்ட அதிகாரி யான வைத்திய கலாநிதி ரவிவர்மா கருத்துத்தெரிவிக்கையில், இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் கனியுப்புக்களின் குறை பாடுகள் அதிகளவில் காணப்படுவதாக கூறினார்.

கனியுப்புக்களின் பற்றாக்குறையே போஷாக்கு சம்மந்தமான நோய்களுக்கு காரணமாக இருப்பதாகவும் குறிப்பாக பெண்களிடத்தில் குருதிச்சோகை போன்ற நோய்கள் அதிகளவில் காணப்படுவதாக வும் அவர் கூறினார்.

அதேவேளை நீரினால் ஏற்படும் நோய் கள் மற்றும் மலம் மூலம் பரவும் நோய்க ளும் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் காணப்படுவதாக ரவிவர்மா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு போதியளவு உணவு கிடைப் பதில்லை என்றும் இரண்டு வாரத்திற்கு ஒரு தடவை ஒரு குறிப்பிட்ட அளவு உணவே கொடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நாம் விஜயம் செய்த அந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு 12 கிராமங்களை சேர்ந்த மக்கள்

அந்த வைத்திய சாலையில் சிகிச்சை பெறச் செல்லும் கர்ப்பிணித்தாய் மார்களை கதிரையில் இருத்தியே பரிசோதிக்க வேண்டியுள்ளதாகவும் அவர்களை உரிய முறையில் பரிசோதிப்பதற்கான கட்டில் கூட இல்லை என்றும் அவர் கவலை தெரிவித்தார்

சிகிச்சைக்காக வருகை தருவதாகவும் எனி னும் நோயாளர்களுக்கு தேவையான வசதி கள் அங்கு குறைவாகவே காணப்படுவதாக வும் அங்கு மருத்துவ அதிகாரியாக கடமை யாற்றும் துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.45 முதல் 10.15 வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநூர் எப்.எம்.(FM 96.1 Mhz) வானொலி ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 முதல் 7.15 வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

தொடர்பான உங்கள் மேலான எண்ணங்களையும் உங்கள் படைப்புகளையும் எமக்கு எழுதி அனுப்புங்கள். அவற்றை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்:info@lifelinesrilanka.com

சுவடுகள்


✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படை யில் திரட்டப்பட்ட IASC (117 ஆவது 06-13 மார்ச் மாதம்) அறிக்கையின் படி இலங்கையில் 72, 368 குடும்பங்களைச் சேர்ந்த 262,887 பேர் அகதிகளாக இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ அனர்த்த நிர்மான முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட அறிக்கையின் படி திருகோண மலை நகர் மற்றும் சுற்றுப்புற பிரதேச செயலாளர் பிரிவுக ளில் 582 குடும்பங்களைச் சேர்ந்த 2,669 தனிநபர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அரச சேவையா ளர்கள், தொண் டர் நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு சமைத்த உணவை வழங்கி உதவினர்.

✱ உயிலங்குளம் உட்பட A14 வீதியில் உள்ள சோதனை நிலையங்களில் ஏற்பட்டுள்ள மட்டுப்படுத்தப் பட்ட நடைமுறைகள் காரணமாக அத்தியாவசிய பொருட்களுக்கான போக்குவரத்தில் தடை ஏற்பட்டுள்ள துடன் பொருட்களின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள் ளது. பெப்ரவரி 4 முதல் வடக்கு மதவாச்சியிலிருந்து வரும் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு கள் காரணமாக மன்னார் மாவட்டத்திற்கான பொதுமக்க ளின் போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

✱ மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர் மற்றும் மலசல தேவையை அறியும் முகமாக WASH அமைப்பின் தொண்டர்கள் மட்டக்களப்பில் உள்ள 21 இடம்பெயர் முகாம்களில் மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளனர்.

பேசும் படம்



மட்டக்களப்பு மாவட்ட மக்களில் பலர் மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ளனர். மக்களின் ஜீவநோபாயமாக இத்தொழில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். படத்திலே மட்டக்களப்பு கல்லடி பாலத்துடன் அமையப்பெற்றுள்ள மீன் பிடித்துறையில் வள்ளத்திலே சென்று மீன்பிடிக்க ஆயத்தமாகும் மட்டக்களப்பு வாழ் மீனவர் ஒருவரையே காண்கின்றீர் கள்.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளி னால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர் களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

வாழ்வின் வர்ணங்கள்

திருகோணமலை மாவட்டத்தின் IOM அமைப்பின் மேலாளராக சேவையாற்றும் ஜெகஜோதி ஒகஸ்மன் ஜீவானந்தம் அவர்கள் தமது வாழ்வின் வர்ணங்களை இங்கு பகிர்ந்து கொள்கின்றார். பல சமூக நல பணிகளில் தன்னை அர்ப்பணித்துள்ள ஜீவானந்தம் மக்கள் படும் இன்னல்களை நன்கு உணர்ந்தவராக காணப்படுகின்றார். இடம்பெயர்வுகள் மற்றும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுப்பதையிட்டும் இவர் பெரிதும் மனம் வருந்துகின்றார். இவர் தனது இளமைக் காலத்தில் இடம்பெயர்ந்து வாழும் சூழ்நிலைக்கு உள்ளாகியிருந்துள்ளமையினால் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் துயரங்களை நேரில் காணும் அனுபவம் பெற்றுள்ளார். இதனால் இடம்பெயர்வின் தாக்கங்களை நன்கு உணர்கின்றார்.



இலங்கையர் அனைவரும் மகிழ்வுடனும் சமாதானத்து டனும் வாழ்வதை பெரிதும் விரும்பும் இவர் இலங்கை வாழ் மக்கள் சாந்தியும் சமாதானத்துடனும் வாழ இறைவனை வேண்டுகின்றார்.

சிறுவர் உரிமை மீறல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் கவிமருவ திட்டம்

(கடந்த வார தொடர்ச்சி)

பிள்ளைகள் எதிர்நோக்கும் இந்த பிரச்சி னைகளுக்கு கவிமடுவ திட்டத்தின் மூல மாக பதில் அளிக்கிறார்

தமது பயிற்சி பட்டறைக்கு சமுகமளிக் கும் பிள்ளைகளுடன் தானும் குழந்தை யாக மாறி ஆடிப்பாடி அவர்களுடைய உரிமைகள் குறித்து விளக்கங்களை வழங் குகிறார் இவருடைய இந்த அணுகுமுறை சிறுவர்களை மிகவும் கவர்ந்துள்ளதோடு எளிமையான முறையில் தமது உரிமைகள் குறித்து அவர்கள் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.

அரசியல் வன்முறைகளால் அதிகள வான சிறுவர்கள் தமது பெற்றோரை இழக்க நேரிடுவதாகவும் இப்பிரதேசம் மிகவும் பின்தங்கிய பிரதேசம் என்பத னால் கற்றல் தொடர்பான பிரச்சினைகள் பல அங்கு காணப்படுவதாகவும் ஈ.ஏ. விஜயசிங்க பண்டார தெரிவித்தார்.

இந்த பிரதேசத்தில் வாழும் மக்களின் ஏழ்மைநிலை காரணமாக. போஷாக்கான உணவின்மை சுகாதாரம் போன்ற அடிப் படை பிரச்சினைகளுக்கும் சிறுவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இங்கு வாழும் சிறுவர்கள் பெரியவர்க ளால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப் படுகின்றனர். ஏழ்மை நிலை காரணமாக பிள்ளைகள் வீட்டு வேலைக்கு அமர்த்தப் படும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக அவர் கவலை வெளியிட்டார்

சிறுவர்கள் முகம் கொடுக்கும் இவ்வா றான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் பிரச்சி னைகளில் இருந்து சிறுவர்கள் விடுபடு வதற்கும் தன்னால் ஆன தீர்வை அவர் வழங்குகிறார்.

கவிமடுவ வேலை த்திட்டத்தில் கலந்து கொண்ட பிள்ளைகளது ஒவியங்களை எமக்கு அவர் காண் பித்தார்.

ஓவியங்கள் மூல மாக சிறுவர்கள் தமது பிரச்சினைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தியுள்ள னர்

புத்தளம் நகரிலி ருந்து சுமார் 10கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது கடா மோட்டை சிங்கள பாடசாலை. அந்த பாடசாலையின் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் சிலரும் அந்த ஓவியப்போட்டியில் கலந்து

தமது பயிற்சி பட்டறைக்கு சமுகமளிக்கும் பிள்ளைகளுடன் தானும் குழந்தையாக மாறி ஆடிப்பாடி அவர்களுடைய உரிமைகள் குறித்து விளக்கங்களை வழங்குகிறார்

கொண்டனர். பாடசாலையின் பிரதி அதிபரான ஏ. பர்னான்டோ கவிமடுவ வேலைத்திட்டம் குறித்து தனது மகிழ்ச்சியினை எம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

இந்த திட்டத்தினால் சூழலில் தமக்கு ஏற் படும் பிரச்சினைகளிலிருந்து தம்மை பாது காத்துக் கொள்ளுவது எப்படி என்பது குறித்து பிள்ளைகள் அறிவைப்பெற்றுள்ள



சனெசிலி மன்றத்தினால் நடத்தப்படும் பாடசாலை மாணவர்கள்

தாக ஏ பர்னாண்டோ குறிப்பிடுகின்றார் அதே போல் பெற்றோர் பிள்ளைகளின் தேவை, பாதுகாப்பு, வழிகாட்டல் போன்ற விடயங்கள் குறித்து தெளிவான அறி வைப் பெறுவதற்கும் இந்த திட்டம் உதவி புரிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான SOLIDAR ஆனது QUIP என்ற நிகழ்ச் சித்திட்டத்தின் ஊடாக சமூக அபிவிருத்தி திட்டமான கவிமடுவத்திற்கு நிதி வழங்கி யுள்ளது.

சொலிடாரின் Quip திட்டம் குறித்த மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் 032-22267617 அல் லது 032-5672626 என்ற தொலைநகல் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

சாளரம்

சில நேரங்களில் சிறிய பிரச்சினை கள் பெரிய தாக்கத்தை உருவாக்கும். கடந்த வாரம் திருகோணமலையில் ஏற்பட்ட கடும் மழையினால் பெரும் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் இடம்பெயர்ந் துள்ளனர். அலெக்ஸ் தோட்டத்தில் வாழும் மக்கள் இதனால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளார்கள். வருடம் தோறும் வரும் மழையின் போது இவ்வாறு வெள்ளம் ஏற்படுவது சகஜமான நிகழ்வு என தெரிவிக்கும் இத்தோட்ட மக்கள் வெள்ளத்தினால் ஏற் படும் பல்வேறு பட்ட அசௌகரியங் கள் குறித்து விசனம் தெரிவிக்கின்றனர்.

வெள்ளத்தினால் பிள்ளைகளின் பாதைகள் துப்பரவு செய்யப்பட்டு, இவ்வேளைகளில் ஒழுங்காக முடிவடைவதை பொறுத்துத் தான் அடுத்த வருடத்தைப் பற்றி கூறமுடி யும் என மஞ்சுளா என்ற பெண் கருத்துத்தெரி வித்துள்ளார்.



அலெக்ஸ் தோட்டம் எப்பொழுதும் பாதிக்கப்படுகிறது எனவும் இதனால் மாணவர்கள் போக்குவரத்து சிரமங்க ளுக்கு முகம் கொடுப்பதுடன், அவர் கள் சீருடையுடன் கீழே விழுந்துகூட வந்துள்ளார்கள் எனவும் தெரிவிக் கப்படுகிறது. செல்வநாயகம்புரம் இந்து மஹா வித்தியாலயத் தைச் சேர்ந்த 14 வயதான பள்ளி மாணவி நிக்லா. செல்வ நாயகம் இவ்வாறு மழை வருவதனால் பாட சாலைக்கு செல்லமால் இருப்பதாகவும் பாதை திருத்தி அமைக்கப் பட்டு வெள்ள நீர் பிரச்சி னைக்கு ஓர் தீர்வு காணப் பட்டால் நிச்சயமாக பாட சாலைக்கு செல்ல முடியும் என தெரி விக்கின்றார்.

கூலித்தொழிலில் ஈடு பட்டு வரும் சந்திரன். மழை பெய்தால் தண்ணீ வராமல் இருக்க கிரவல் அடிக்க வேண்டும். அல்லது பால த்தை கட்ட வேண்டும் என கூறுகின்றார். வெள்ளத்தி னால் பாதிக்கப் பட்டு பல சிரமங்க ளுக்கு முகம் கொடுக்கும் இம்மக்கள் புது வாழ்வு பெற பிரார்த்திக்கின்றோம்.

மன்னாரில் கல்வி முன்னேற்ற செயற்பாடுகளில் உலக தரிசனம்

அண்மை நாட்காளக யுத்தம் மையம் கொண்டுள்ள பிரதேசமாக மன்னார் மாறியுள்ளது.

அங்கு நிலவும் போர்ச் சூழல் பல்வேறு தரப்பினரையும் வெகுவாக பாதித்துள்ளது குறிப்பாக மாணவர்கள் தமது கல்வியை தொடர்வதில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்

போர்ச் சூழல்களால் பாதிக்கப்பட்டுள்ள இளம் சமுதாயத்தின் கல்வி முன்னேற்றத்திற்காக பல்வேறு உதவிகளை உலக தரிசன நிறுவனம் (World Vision) எனும் அரச சார்பற்ற நிறுவனம் வழங்கி வருகின்றது.

மன்னார் மாவட்டத்திலிருந்து சுமார் 10கி.மி. தொலைவில் அமைந்துள்ளது சவுத்பார் கிராமத்தில் உலக தரிசன நிறுவனத்தால் நூலகம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது

நாம் அந்த நூலகத்திற்கு விஜயம் செய்த ஒரு மாலைப் பொழுதில் அந்த கிராமத்துச்சிறார்கள் நூல்களை வாசித்துக் கொண்டு இருந்ததை காணமுடிந்தது

சவுத்பார் கிராமத்தில் வசிக்கும் அபிஷேக் இந்த நூலகம் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து தரப்பினருக்கும் பேரூதவியாக அமைந்துள்ளது என்றும் இங்கு காணப்படும் அகராதிகளால் உயர் தர வகுப்பு மாணவர்கள் அதிக நன்மை அடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக பல இழப்புகளை சந்தித்து வரும் மன்னார் மாவட்ட மக்கள் அழியாத பெரும் செல்வமாக கல்வியையே கருதுகின்றனர்.

உலக தரிசன நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ள நூலகத்தில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு தேவையான அனைத்து



உலக தரிசன நிறுவனத்தால் அமைக்கப்பட்ட நூலகம்

பாடப் புத்தகங்களும் உள்ளன.

உலக தரிசன நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் ரெஜி ஜெயபாலன் கருத்துரைக்கும் போது மாணவர்கள் பாடசாலை பயிற்சி புத்தகங்களை வாங்க முடியாமல் உள்ளதாகவும் அரசாங்கம் கொடுக்கும் பாடப் புத்தகங்களுக்கு அப்பால் மேலதிக அறிவை பெறுவதற்கு வசதியற்றிருப்பதாகவும் கூறினார்.

இந்நிறுவனத்தில் சமூக ஒருங்கிணைப்பாளராக பணிபுரியும் எமில்டா ஜெனி நூலகம் கிடைத்த மகிழ்ச்சியை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

இந்த நூலகத்தினால் மாணவர்கள் பலர் நன்மையடைவதாகவும் பெரியவர்கள் நூலகத்திற்கு வந்து தமது பிள்ளைகளுக்கு தேவையான புத்தகங்களை எடுத்து செல்வதாகவும் எமில்டா குறிப்பிட்டார்.

மாலை நேர வகுப்பு கொடுக்கும் ஆசிரியர்களும் நூலகத்திற்கு வந்து நூல்களை கொண்டு செல்வதாகவும் நூலகம் ஒன்று தமது கிராமத்தில் இருப்பது வரப்பிரசாதம் என்றும் அவர் கூறினார்.

மன்னார் மக்கள் தொடர்ந்தும் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்தவன்னமே உள்ளனர். இளைய சமுதாயத்தினரின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உயர் கல்வியை தொடர்வதிலும் அம்மக்கள் பிரச்சனையையே எதிர்நோக்குகின்றனர்.

உயர் தரத்திற்கு மேல் தொடர்வதற்கு மன்னார் மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு வசதிகள் இல்லை என்றும் எந்த ஒரு உயர் கல்வி நிறுவனமோ தொழில் நுட்ப கல்லூரியோ அங்கு இல்லாதமை பெரும் குறையாகும் என்றும் உலக தரிசன நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் ரெஜி ஜெயபாலன் தெரிவித்தார்

உயர் தரத்திற்கு மேல் தொடர்வதற்கு மன்னார் மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு வசதிகள் இல்லை என்றும் எந்த ஒரு உயர் கல்வி நிறுவனமோ தொழில் நுட்பக் கல்லூரியோ அங்கு இல்லாதமை பெரும் குறையாகும்

இளைய சமுதாயத்தின் முன்னேற்றம் கல்வியிலேயே தங்கியுள்ளது. ஆரம்ப நிலையிலேயே கல்வி தடைப்பட்டால் எதிர்கால சமுதாயத்தின் நிலை என்ன?

தமக்கு ஒளிமயமான எதிர்காலம் என்று பயனிக்க நூலகம் என்னும் சிறிய கதவு திறக்கப்பட்டுள்ளதாக உவகையுறும் இந்த சிறார்கள் உயர்கல்விக்கான வாயில்களும் திறக்கப்படுமா என ஏக்கத்துடன் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

அறிவோம் தெரிவோம்

மனித நேய சாசனமும் அனர்த்த மறுசீரமைப்பின் அடிப்படைத் தரங்களும் உணவிற்கான உரிமை தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாட்டினைப் பற்றி RedR அமைப்பின் மாவட்ட கற்றல் துணை அலுவலர் சுசாந்தி கோபாலகிருஷ்ணன் தெரிவிக்கும் கருத்துக்கள்:

சர்வதேச சட்டங்களானது இடரினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தனிநபரும் அடிப்படையில் போதுமான உணவை பெறுவதற்கு உரிமை உள்ளவர்கள் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

போதிய அடிப்படை உரிமைக்கான முக்கியமான இரண்டு விடயங்களாக: ஒன்று ஒரு தனி நபரின் உணவுத்தேவையானது அதன் அளவிலும் தரத்திலும் போதுமானதாக இருப்பதுடன் குறிப்பிட்ட உள்ளூர் கலாச்சாரங்களுக்கு அல்லது பழக்கவழக்கங்களுக்கு ஏற்ற வகையில் ஏற்புடையதாக பாதுகாப்புடன் இருக்க வேண்டும்.



இரண்டாவதாக உணவைப் பெறுவது ஒரு நிலைத்திருக்க வேண்டிய தன்மையை கொண்டிருப்பதுடன் மற்றய மனித உரிமைகளுடன் தலையிடாது இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு உணவுப் பாதுகாப்பு பற்றிய ஒரு பிரிவில் உணவுப் பாதுகாப்பு தரம் ஒன்றானது பொதுவான உணவு பாதுகாப்பு தரத்தைப் பற்றி கூறுகின்றது. மக்கள் தாம் உயிர்வாழ்வதை உறுதி செய்வதற்கும் கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கும் மற்றும் தேவையில்லாத அழிவுகளில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்வதற்கும் தகுந்த உணவும், உணவல்லாத விடயங்களும் வழங்கப்பட வேண்டும் என்று இந்தத் தரம் குறித்து நிற்கின்றது.

இத்தரமானது எவ்வளவு தூரம் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கு பல குறிகாட்டிகளும் வழிகாட்டி குறிப்புகளும் உள்ளன.

இதில் உதாரணமாக 3 குறிகாட்டிகளை பார்ப்போமானால் இந்தத் தரத்துடன் தொடர்புபட்டுள்ள குறிகாட்டிகளில் ஒன்று. மக்களுடைய வாழ்க்கையானது உணவு அபாயத்தில் இருக்கும் பொழுது கண்டிப்பாக அதனுடன் தொடர்புபட்ட உடனடி தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முதன்மையளித்துக் கொள்ள வேண்டும் எனவும் இன்னமும் ஒரு குறிகாட்டி இடரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருடன் சரியான முறையில் ஒரு கலந்தாலோசனை மேற் கொண்டு சரியான ஒரு பகுப்பாய்வின் அடிப்படையில்தான் உணவுப்பாது காப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனவும் இதனுடன் தொடர்புபட்ட இன்னொரு குறி காட்டி மக்களுடைய சமாளிக்கக் கூடிய யுக்திகளை கவனத்தில் கொள்வதுடன் அந்த சமாளிக்கும் திறன்களினால் ஏற்படக்கூடிய பலாபலன்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அபாயங்கள் செலவினங்கள் என்பவற்றையும் கண்டிப் பாக கவனத்தில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டு நிற்கின்றது.

சர்வதேச பெண்கள் தினமும் தீர்க்கப்படாத பெண்களின் பிரச்சினைகளும்

நாட்டில் கடந்த வாரம் சர்வதேச பெண்கள் தினம் நினைவு கூறப்பட்ட நிலையில் யுத்த சூழ்நிலை நிலவும் வட மாகாணங்களில் பெண்கள் உரிமை தொடர்பாக பல வேறு அமைப்புக்களுடன் இணைந்து பணிபுரியும் அசோக்கா மன்றத்தின் இலங்கைக்கான பொறுப்பாளர் ஷரீன் சரூக்கை நேர் கண்ட போது அவர் கூறிய விட யங்கள் இங்கு தரப்படுகின்றது:

பெண்கள் இன்னமுமே பாலி யல் வல்லுறவிற்கு உட்படுத்தப் படுகின்ற ஒரு நிலையே நாட் டில் உள்ளதாகவும் வடக்கு கிழக்கை பொறுத்த வரையில் அன்றாட பாலியல் வன்முறை அவர்களுக்கு ஒரு சாப்பிடுகிற ஒரு விடயம் போல ஆகிவிட்ட தாகவும், சில பெண்கள் பாலி யல் வன்முறை பாலியல் வருத் தங்களுக்கு உட்படுத்தப்படும் போது அது பாலியல் வல்லு றவா என்று தெரியாத ஒரு நிலைப்பாட்டிற்கு கூட ஆளா வதை காணக்கூடியதாக உள்ள தாக கவலை தெரிவிக்கின்றார். ஆயுத கலாச்சாரம், எதையும் ஆயுதத்தை வைத்துக்கொண்டு செய்யலாம் என்ற ஒரு நிலை போன்றவையே இதற்கு மூல காரணங்களாக உள்ளதாக தெரிவித்துள்ள அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கிடைத்த பதில்கள் வருமாறு:

இடம்பெயர்ந்த அல்லது மீள் குடியேற்ற பிரதேசங்களில் வாழ்கின்ற பெண்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய தாக உள்ளது?

இந்நாட்டில் நடக்கின்ற பிரச்சி னைகளை எடுத்துப்பார்த்தால் ஆண்கள் ஒன்றில் இல்லாமல் போய்விடுகிறார்கள் அல்லது அவர்கள் யுத்தத்தில் ஈடுபடு கின்றார்கள் அல்லது வெள்ளை வானில் வந்து கடத்தி செல்லப்படு கிறார்கள். இவ்வாறான நிலையில் பெண்கள் பல உரிமை மீறல்க ளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். அவர்களுக்கு எந்த பாதுகாப்பும் இல்லை. வடக்கில் எடுத்து பார்த் தால் சின்ன பிள்ளைகளை ஆயுத கலாச்சாரத்திற்கு எடுப்பது கூடக் கொண்டு போகின்றது. பெண்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுகிறார் கள். துன்புறுத்தப்படுகிறார்கள். பாலியல் துன்புறுத்தல்களையும் பிரயோகங்களையும் பற்றி கதைக் கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கி றார்கள்.

இடம்பெயர்தலினால் பெண்க ளுடைய வழமையான வாழ்க் கையில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுகின்றது?

பெண்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தனிமைப்படுத் தப்பட்டு இருக்கையில் சில முகாம் களை எடுத்துப் பார்த்தால் முகாம் களுக்கு பொறுப்பாக இருக்கின்ற



அசோக்கா மன்றத்தின் இலங்கைக்கான பொறுப்பாளர் ஷரீன் சரூக்

ஆண்கள் இந்தப் பெண்களை தவ றான வழிக்கு உட்படுத்துகின்ற ஒரு நிலைப்பாடு உள்ளது. ஆதர வின்றி சமூதாய பிணைப்புகள் இன்றி உள்ள பெண்களும் வேறு

வடக்கு கிழக்கை பொறுத்த வரையில் அன்றாட பாலியல் வன்முறை அவர்களுக்கு ஒரு சாப்பிடுகிற ஒரு விடயம் போல ஆகிவிட்டது

வழியின்றி தாம் தனிமையில் இருக்கும் போது தங்களது தேவை களை பெற்றுக்கொள்ள இவ்வா றான நிலைப்பாட்டிற்கு தள்ளப் படுகின்றார்கள். மற்றது பெண்கள் கட்டாயத்தில் தங்களது உடம்பை விற்க வேண்டிய ஒரு நிலைப் பாடும் உள்ளது. எங்களுடைய சமுதாய பெண்களுக்கு தொழிலை திறமாக செய்வதற்கு அவர்களுக்கு ஒரு வழிகாட்டலும் இல்லாத படியால் அந்த பெண்கள் தங்களது உடம்பை விற்றுத்தான் அன்றாடம் தனது பிள்ளைக்கு சாப் பாடு கொடுக்க வேண்டிய நிலைப் பாட்டிற்கும் தள்ளப்பட்டு இருக் கிறார்கள். மேலும் பல பெண்கள் வெளிநாட்டிற்கு போவதற்கும் இவ்வாறான பிரச்சனைகள் காரண மாக அமைகின்றது. பெண்களுக்கு என்று சொல்லி சரியான தொழில் பயிற்சியும் இல்லை. அத்துடன் தொழிலை பெறுவதற்கு வசதிகளும் இல்லை பெண்களை இரண்டாம் தர மாக வைத்திருக்கின்ற படி யால் பெண்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதி யமும் சரியான குறைவு.

பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருக்கின்ற பெண்க ளுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

யுத்தகாலத்திலோ அல் லது நாட்டில் பிரச்சனைகள் இருக்கின்ற காலத்திலோ பெண்கள் தான் எல்லாவற் றிற்கும் முகம் கொடுப்பது. முதுகெலும்பாக இருப்பது பெண்கள் தான். பெண்க ளுக்கு என்று சொல்வதை விட நாட்டில் இருக்கின்ற தீர்மானம் எடுக்கின்ற உயர் மட்டத்தில் இருக் கிறவர்களுக்கு ஒரு செய்தியை கூற விரும்புகின்றேன். பெண்கள் தற்பொழுது படும் பிரச்சின களை தீர்ப்பதற்கோ அல்லது நாட்டில் இருக்கின்ற பிரச்சி னைகளை தீர்ப்பதற்கு ஏதுவான ஒரு நிர் வாக கட்டமைப்பு முறை இல்லை. பொலிஸ் நிலையத் திற்கு சென்றால் கூட பொலிஸ் துரத்தி விடுகின்ற ஒரு நிலைப்பாட்டில் தான் நிலைமை உள்ளது. பெண்கள் எங்கும் போய் முறைப்பாடு செய்வது என்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. எனவே பெண்களை பொறுத்த வரையில் அவர் தம் பிரச்சனைகளை முறையிட பெண் அபிவிருத்தி நிலையங்களுக்கு செல்வது தான் சிறந்த வழி என்று நினைக் கின்றேன்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS

USAID FROM THE AMERICAN PEOPLE

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோட்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரயோகிக்கப்படக் கூடிய அனைத்து சர்வதேச நியமங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்திறனுடன் அமும் படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட கையொப்பமிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் கீழ் கையொப் மிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமல்படுத்தும் பங்காளர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசசார் பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

1. **மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவியின் குறிக்கோள்:** இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்து வதில், பங்களிப்பதற்கு நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றோம். எங்கள் உதவிகள் மக்களின் வேதனைகளை நீக்குதல், வறுமையை ஒழித் தல், இலங்கையின் மோதல் நிலைமைகளுக்கு அமைதியான தீர்வொன் றிற்கு ஆதரவளித்தல் உட்பட சமூகங்கள் தன்னிறைவை அடைய உதவுதல் போன்றவை குறித்துக் கவனம் செலுத்துகின்றன.
2. **பாரபட்சமின்மை:** இடவமைவு, இனம், பால்நிலை, சமூக அந்தஸ் த்து அல்லது மதம் என்பவற்றைக் கருதாது இனங்காணப்பட்ட தேவை களின் அடிப்படையில் மட்டுமே நாங்கள் உதவிகளை வழங்குகிறோம்.
3. **பக்கச்சார்பின்மை:** எங்களது உதவிகள், வழங்கல்கள், வாகனங்கள், வசதிகள் அல்லது உபகரணங்கள் என்பன எந்தவொரு இராணுவ, அரசி யல் அல்லது பிரிவினை நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ளாததுடன் நாங்கள் பக்கச்சார்பின்மையுடன் இருப்போம்.
4. **மனித கௌரவத்தை மதித்தல்:** சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றுக்கான மதிப்பளித்தலை நாங்கள் வேண்டுகிறோம். நாங்கள் உள்ளூர்ச் சமூகங்கள் வெளிப்படுத்திய விருப்புகளின் விளைவாக பணியாற்றுவதுடன் மக்களது கௌரவம், அவர்களது கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரியங்களை மதிக்கின்றோம்.
5. **ஒளிவு மறைவின்மை மற்றும் பொறுப்புக் கூறல்:** நாங்கள் உதவி செய்ய நாடுபவர்களுக்கு நாங்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்களா வோம். எங்களது உதவிகள் ஒளிவு மறைவு இல்லாதவை என்பதை நாங் கள் உறுதிப்படுத்துவோம். அபிவிருத்தி அல்லது மனிதாபிமான உதவிக ளுக்கான வழங்கல்கள் அல்லது உபகரணங்களில் ஊழல் எதனையும், களவு அல்லது துஷ்பிரயோகங்களை அனுமதிக்கமாட்டோம்.
6. **நிலைத்து நிற்றல் மற்றும் தயார்படுத்தல்:** உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் எங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதுடன் உள்ளூரில் கிடைக்கும் வளங்களை அதிகரிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளோம். சிவில் சமூகங்கள், வர்த்தக சமூகங்கள், உள்ளூர் அதிகார சபைகள் போன்ற உள்ளூர் அமைப்புக்கள், தற்போதைய தேவைகள் குறித்து கவனம் செலுத்த மற்றும் எதிர்கால அவசர நிலைமை களைத் தவிர்க்க அல்லது எதிர் கொள்ளத் தயாராவதற்கு வலுவூட்டு கிறோம்.
7. **ஆலோசனை மற்றும் பங்குபற்றல்:** நாங்கள், சமூகங்களை அவர்களது நன்மைகளுக்காக அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்க, திட்டமிட, முகாமைத்துவம் செய்ய, நடைமுறைப்படுத்த மற்றும் மதிப்பீடு செய்வதில் அவர்களை ஈடுபடுத்து வதற்கு நாடுகிறோம்.
8. **ஒருங்கிணைத்தல்:** நாங்கள், எங்களது செயற்பாடுகளை அரசாங் கம் மற்றும் தொடர்புடைய அனைத்து அக்கறையாளர்களுடனும் ஒவ் வொரு மட்டத்திலும் ஒருங்கிணைக்கின்றோம்.
9. **வழிவகைகள்:** உதவி தேவைப்படும் அனைத்து மக்களுக்குமான அடிப்படைத் தேவையாக கட்டுப்பாடுகளற்ற வழிவகைகளை நாம் வேண் டிக் கொள்கின்றோம். மனிதாபிமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊழியர்களுக்கான அதிகாரத்தை விரைவில் வழங்குவதையும் சுங்கப்பகுதியிலிருந்து வெளிக்கொண்டு வரு வதையும் நாம் எதிர் பார்க்கின்றோம்.
10. **பாதுகாப்பும், பத்திரமும்:** சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளிட மும் முகவர் ஸ்தாபனங்கள் மற்றும் அவர்களது ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுகந்திரத்தை தற்காத்து பாதுகாப்பை மேம்படுத்துமாறு வேண்டுகிறோம். ஊழியர்கள் வன்முறை, கடத்தப்படல், தொந்தரவு அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகுவதை நாம் அனுமதிக்கமாட்டோம். எங்களது பணிகளுடன் தொடர்புகளற்ற ஆட்கள் அல்லது பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு எங்களது வாகனங்கள் உபயோகப்படுத்தப் படல் கூடாது.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற் படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்டவலுவான ஆவணமோ அல்ல.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.